JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 54/2016 |
| | : | Prosecution P.W – 6 |
| NAME | : | கலசலிங்கம் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 26.11.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக பணிபுரிந்தபோது கடந்த 20.02.2014ம் தேதி 15.00 மணிக்கு நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்த போது மேலக்கடையநல்லூர் குத்தால மகன் புதியவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகா'ர மனுவைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 65/2014 இந்திய தண்டனை சட்டம் இதசபிரிவுகள் 294(b), 323, 506(2)–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். அந்த முதல் தகவலறிக்கை அ.சா. ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லும் நாள் 15.02.2014 ம் தேதி மாலை 5.30 மணி என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்ட நாள் என்ன என்றால் 20.02.2014. மேற்படி 5 நாளுக்கு என்ன கால தாமதம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 8 ல் வாதியால் தாமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் என்ன காரணம் என்று குறிப்பிடபடவில்லை என்றாலும் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நான்எழுதி பதிவு செய்தேனா என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் அதே தேதியில் அனுப்பினேன். நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை 21.02.2014 ம் தேதி காலை 10.30 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் புகார்தாரர் முன் விரோதம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பேசியதால் அவமானம் ஏற்பட்டதாக முதல் தகவல்அறிக்கையில், புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மிரட்டியதால் உயிர் பயம் ஏற்பட்டதாக முதல் தகவல்அறிக்கையில், புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் புகார்தாரரிடம் வெற்று தாளில் பையொப்பம் வாங்கிவிட்டு பின் யோசனை செய்து முதல் தகவல் அறிக்கை தயார்செய்தேன் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi